# ஓசூர் மாநகராட்சி

## மாமன்ற கூட்ட அறிக்கை

2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11ம் தேதி திங்கட் கிழமை **பிற்பகல் 12.00** மணிக்கு **மாமன்ற** சாதாரணக் கூட்டம் மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள **மாமன்ற கூட்ட அரங்கில்** நடைபெறும். எனவே **மாமன்ற உறுப்பினர்கள்** அனைவரும் கூட்டத்தில் தவறாது பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாமன்ற மேயர்**
ஓசூர் மாநகராட்சி

---

**மாமன்றப் பொருள்**

**பொருள் எண் 1**

**மாமன்ற மேயர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்**

ஓசூர் மாநகராட்சிக்கு சொந்தமான காமராஜ் காலனியில் உள்ள விளையாட்டு திடலுக்கு தமிழ்நாட்டின் முதலமைச்சராக 5 முறை பதவி வகித்த முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர்.மு.கருணாநிதி அவர்களின் நினைவை போற்றும் வகையில் மேற்கண்ட விளையாட்டு திடலுக்கு "**கலைஞர்.மு.கருணாநிதி விளையாட்டு திடல்**" என பெயர் சூட்ட மாமன்றத்தின் அனுமதிக்கு

**பொருள் எண் 2**

**மாமன்ற மேயர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்**

ஓசூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட சிப்காட் பகுதியில் தற்போது ஓரே ஒரு தீயணைப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது. இம்மாநகராட்சியின் பரப்பளவு 72.41 ச.கி.மீ மற்றும் மக்கள்தொகை 3,00,000 ஆகும். இம்மாநகராட்சி ஓசூர், ஜுஜுவாடி, மூக்கண்டப்பள்ளி, ஆவலப்பள்ளி, சென்னத்தூர் மற்றும் மத்திகிரி பகுதிகளை கொண்டதாகும். இங்கு 1000–க்கும் மேற்பட்ட சிறு, குறு தொழிற்சாலைகள், வணிக நிறுவனங்கள் அதிகளவில் இயங்கி வருகிறது. மேலும் இங்கு பணிபுரியும் பணியாளர்கள் பெருமளவில் மேற்கண்ட பகுதிகளிலே குடியிருந்து வருகின்றனர். ஏற்கனவே எல்காட்டில் நடைபெற்ற தீ விபத்தில் தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்திற்கு வர அதிக நேரம் எடுத்துக்கொண்டதால் தீ பரவலை கட்டுப்படுத்த இயலாமல் மாநகராட்சி குடிநீர் லாரிகளை கொண்டு தீயணைப்பு நடவடிக்கைகள் மேற்கொண்ட போதிலும் சேதத்தை கட்டுப்படுத்த இயலவில்லை. சிப்காட் I–ல் அதிகளவில் தொழிற்சாலைகள் இருப்பதால் இப்பகுதியில் இருக்கும் தீயணைப்பு வாகனம் இப்பகுதியில் ஏதேனும் அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் அதற்கே போதுமானதாக இல்லை. இந்நிலையில் நகரின் வேறு பகுதிகளில் ஏதேனும் அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் சிப்காட் I–லிருந்து தீயணைப்பு வாகனங்கள் செல்வதற்கு 30 முதல் 45 நிமிடங்கள் வரை ஆகிறது. இதனால் பெரும் சேதங்கள் ஏற்படுவதை தடுக்க இயலவில்லை. எனவே எதிர்வருங்காலங்களில் சேதங்களை தடுக்கும் பொருட்டு இம்மாநகராட்சி பகுதியில் கூடுதலாக ஒரு தீயணைப்பு நிலையமும் அதற்கான கூடுதல் வாகனங்களும் வழங்க கோரி அரசை கேட்டுக்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு

**பொருள் எண் 3**

**<u>மாமன்ற மேயர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்</u>**

ஓசூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் சுமார் 100க்கும் மேற்பட்ட சுற்றுப்புற சுகாதாரத்தை பாதிக்கும் பிளாஸ்டிக் பொருட்கள் சேகரிக்கும் கிடங்குகள், குடியிருப்பு பகுதிகள், பள்ளிகள், வழிபாட்டு தலங்கள் ஆகியவற்றிற்கு அருகில் அமைந்துள்ளன. இக்கிடங்குகளில் அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்படுவதால் மாசு ஏற்பட்டு பொதுமக்கள் மற்றும் பள்ளி குழந்தைகள் பாதிப்படைந்து வருகின்றனர். மேலும் இக்கிடங்குகளில் பழைய பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்ய வரும் நபர்கள் சட்டத்திற்கு புறம்பான வகையில் பொருட்களை கொண்டு வருவதும், அதனால் பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் உள்ளது. நகரில் உள்ள பெரும்பாலான குடியிருப்போர் நலச்சங்கத்தினர் மேற்கண்ட பழைய பிளாஸ்டிக் பொருட்கள் சேகரிப்பு கிடங்குகளில் பாதுகாப்பு கருதி அகற்றும்படி மாநகராட்சி நிர்வாகத்திற்கு கோரிக்கை விடுத்த வண்ணம் உள்ளனர். எனவே இதனை தவிர்க்கும் பொருட்டும் சுற்றுப்புற சூழலுக்கு மாசு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும் ஓசூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கி வரும் பழைய பிளாஸ்டிக் பொருட்கள் சேகரிக்கும் அனைத்து கிடங்குகளும், மாநகராட்சிக்கு வெளியில் கொண்டு செல்ல நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு.

**பொருள் எண் 4**

**<u>மாமன்ற மேயர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்</u>**

ஓசூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அதிக அளவில் வணிக நிறுவனங்கள், ஹோட்டல்கள் மற்றும் சிறு, குறு வியாபாரிகள், பூ விற்பனை செய்பவர்கள் அதிக அளவில் பிளாஸ்டிக் கவர்களை பயன்படுத்தி வருகின்றனர். இதனால் நகரில் சேகரமாகும் குப்பைகளில் பெருமளவு பிளாஸ்டிக் கழிவுகள் சேகரமாகின்றன. மேலும் இதனால் கால்வாய்களில் அடிக்கடி அடைப்பு ஏற்பட்டு சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. பிளாஸ்டிக் கவர்களை ஒட்டுமொத்தமாக தடை செய்தால் மட்டு சுகாதாரத்தை சுற்றுசூழலையும் பேணிக் காக்க இயலும். எனவே இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பிளாஸ்டிக் கவர்களை விற்பனை செய்வது, அவற்றை பயன்படுத்துவது ஆகியவற்றை உடனடியாக தடை செய்வதற்கும் மீறினால் அபராதம் விதிக்கும் நடைமுறையை கடுமையாக செயல்படுத்துவதற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு

**பொருள் எண் 5**

**<u>மாமன்ற மேயர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்</u>**

ஓசூர் மாநகராட்சிக்கு சொந்தமான காமராஜ் காலனியில் உள்ள விளையாட்டு மைதானத்தில் கூடை பந்து (Basket Ball) மற்றும் கைப்பந்து (Valley Ball) விளையாட்டுகள் நடைபெறும் போது பார்வையாளர்கள் அமர்ந்து பார்வையிடுவதற்கு வசதியாக பார்வையாளர்கள் மாடம் கட்டுவதற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு

**பொருள் எண் 6**

**<u>மாமன்ற மேயர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்</u>**

இம்மாநகராட்சிக்கு சொந்தமான அனைத்து தொடக்கநிலை பள்ளிகள் மற்றும் நடுநிலைப்பள்ளிகளின் சுற்றுச்சுவர்களில் ஓவியத்துடன் கூடிய தலைவர்களின் புகைப்படங்கள், விழிப்புணர்வு வாசகங்கள், தமிழ்மொழி வரலாறு மற்றும் தமிழ் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் வகையில் புகைப்படங்கள்/ஓவியங்கள் மற்றும் சுற்றுச்சூழல் குறித்த ஓவியங்களை வரைவதற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு

**பொருள் எண் 7**

**மாமன்ற மேயர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்**

2019–2020 முதல் 2021–2022 ஆண்டிற்கான மூன்றாண்டு குத்தகைகளுக்கு, இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண் 7293/2015/அ3 நாள் 30.03.2019யின்படி புதிய பேருந்து நிலையத்திலுள்ள கட்டணக் கழிப்பிடம் குத்தகைக்கான உத்திரவு வழங்கப்பட்டது. மேற்காணும் கட்டணக் கழிப்பிடத்திற்கான குத்தகை 31.03.2022ம் தேதியுடன் மூன்றாண்டு குத்தகை முடிவடைகிறது.

பொதுமக்களின் நீண்ட கால கோரிக்கையை ஏற்றும், பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டும், மேற்கண்ட கட்டணக் கழிப்பிடத்தினை 01.04.2022ம் தேதி முதல் இலவசமாக பொதுமக்கள் பயன்பட்டிற்கு கொண்டு வரப்பட்டதை ஏற்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் 8**

2019–2020 முதல் 2021–2022 ஆண்டிற்கான மூன்றாண்டு குத்தகைகளுக்கு, இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண் 7293/2015/அ3 நாள் 30.03.2019யின்படி குத்தகைக்கான உத்திரவு வழங்கப்பட்டது. அதில் கீழ்க்காணும் இனங்கள் மூன்றாண்டு குத்தகையில் 2021–2022ம் ஆண்டு 31.03.2022ம் தேதியுடன் மூன்றாண்டு குத்தகை முடிவடைகிறது.

1) புதிய பேருந்து நிலைய பேருந்து சுங்க வசூல்
2) புதிய பேருந்து நிலைய இருச்சக்கர வாகன நிறுத்த வசூல்
3) புதிய பேருந்து நிலைய பொருட்கள் பாதுகாப்பு அறை
4) ஆடு அடிக்கும் வளாகம்
5) புதிய பேருந்து நிலையத்தில் எடை பார்க்கும் இயந்திரம் வைத்துக் கொள்ளும் உரிமம்

மேற்காணும் குத்தகை இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் கோர நடவடிக்கை எடுக்கப்படும்பொழுது 26.01.2022 முதல் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் 2022 தேர்தல் விதிமுறைகள் நடைமுறைக்கு வரப்பெற்றதால், குறிப்பிட்ட காலகெடுவிற்குள் ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் கோர இயலாத சூழ்நிலை காரணமாக 01.04.2022 முதல் 30.04.2022 வரை ஒரு மாத காலத்திற்கு 2019–2020 முதல் 2021–2022ம் ஆண்டிற்கான குத்தகைதாரர்களால் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையினை ஒரு மாதத்திற்கு மட்டும் கால நீடிப்பு செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அ) மாமன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குத்தகை இனத்தின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு, மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி, வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று கால நீடிப்பு செய்யப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 7293/2019/அ3

பொருள் எண் 9

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்து வரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்து வரி சீராய்வு செய்வது அரசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15வது மத்திய நிதி ஆணையம், 2022–2023ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்து வரி விகிதம் (Floor rate i.e. Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும் தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூத் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி . காலிமனை வரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை (நிலை) எண் 73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 19.07.2018 மற்றும் அரசாணை (நிலை) எண் 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி . காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை (நிலை) எண் 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.11.2019ன்படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி/காலிமனை வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும் இக்குழுவானது சொத்து வரி/காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பண வீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும் நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித் தேவை, பொதுமக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக் குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனை வரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி.காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவிற்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி/காலிமனை வரி சீராய்வு செய்ய வேண்டும்.

இம்மாநகராட்சியில் தற்போது நடைமுறையில் உள்ள சொத்து வரி மற்றும் காலிமனை வரிகளின் அடிப்படை மண்டல மதிப்பு கீழ்க்கண்டவாறு

| மண்டலங்கள் | ஏற்கனவே உள்ள அடிப்படை மதிப்பு (சதுர அடிக்கு) | |
|---|---|---|
| | சொத்து வரி | காலிமனை வரி |
| A | ரூ.1.35 | ரூ.0.40 |
| B | ரூ.1.10 | ரூ.0.40 |
| C | ரூ.1.00 | ரூ.0.40 |

சொத்து வரி/காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண் 53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண் 40032/2012/ஆர்1 நாள் 01.04.2022 ஆகியவற்றில் கீழ்க்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>சொத்து வரி :</u>

**குடியிருப்பு கட்டடங்கள் (Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கான காரணி |
|---|---|
| < = 600 | 1.25 |
| 601 - 1200 | 1.50 |
| 1201 – 1800 | 1.75 |
| > 1800 | 2.00 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள் (Non–Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கான காரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2.00 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

1) 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்து வரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
2) 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்து வரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்து வரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்து வரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்து வரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 75% சொத்து வரி உயர்வு செய்யப்பட வேண்டும்

**காலிமனை வரி சீராய்வு :**

காலிமனை வரி விதிப்பிற்கு 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும் சொத்து வரி விதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி, வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**தன்னிச்சையான வருடாந்திர சொத்து வரி சீராய்வு:**

ஏற்கனவே உள்ள சொத்து வரி/காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்து வரி/காலிமனை வரி உயர்வு செய்து சொத்து வரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் ஒசூர் மாநகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்க்கண்டவாறு கடன் தொகை/நிதித் தேவை உள்ளது.

| வ. எண் | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி (Current Liabilities) (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | ரூ.2.50 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விவரம் | ரூ.2.54 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விவரம் (டுபிட்கோ, டுபிசெல், பிற) | ரூ.5.00 |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வுக்கால பணப்பலன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி, நகராட்சியின் பங்குத் தொகை மற்றும் பிற பணப்பயன்கள் (நிலுவைத் தொகை) | ரூ. – |
| | **மொத்தம்** | **ரூ.10.04** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 81-A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 40032/2012/ஆர்1, நாள் 01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், ஒசூர் மாநகராட்சியில் சொத்து வரி/காலிமனை வரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண் 2503/2022/அ1

மாமன்ற மேயர்
ஒசூர் மாநகராட்சி

2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11ம் தேதி திங்கட் கிழமை பிற்பகல் 12.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தின் நடவடிக்கைகள்

தலைமை – திரு.எஸ்.ஏ.சத்யா,
மாமன்ற மேயர், ஒசூர் மாநகராட்சி

| பொருள் எண் | தீர்மான எண் | கூட்ட நடவடிக்கை |
|---|---|---|
| 1 | 07 | மாமன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 2 | 08 | மாமன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 3 | 09 | மாமன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 4 | 10 | மாமன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 5 | 11 | மாமன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 6 | 12 | மாமன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 7 | 13 | மாமன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 8 | 14 | மாமன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 9 | 15 | மாமன்றம் அனுமதிக்கப்பட்டது |

(ஒம்) எஸ்.ஏ.சத்யா
மாமன்ற மேயர்
ஒசூர் மாநகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்
ஒசூர் மாநகராட்சி